DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.26/2023

**prosecution witness: LW-3 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நந்தீஸ்வரி | தொழில்/ பதவி | : | வீட்டுக்குடித்தனம் |
| க/பெ. | : | பாஸ்கரன் | வயது | : | 38 |
| ஊர் | : | வேர்கோடு, இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**<u>14.07.2026</u>**

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது இராமேஸ்வரம் வேர்க்கோடில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 குருசெல்வம் எனது தங்கையின் வீட்டுக்காரர் ஆவார். பாஸ்கரன் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகள் மூவரும் எனது வீட்டுக்கருகில் குடியிருந்து வருகிறார். அ.சா.2 எனது மகன் ஆவார். 23.06.2022ம் தேதி இரவு 8.30 மணி இருக்கும் எனது மகனும் எனது கொளுந்தனும் டீசல் பிடிக்க சென்றார்கள். அவர்கள் டீசல் வாங்கி வந்த பின்பு சேசு அவர்கள் வீட்டிற்கு அருகில் பைக்கை நிறுத்தினார்கள். அங்கு கார்த்திகைராஜு என்வர் கடை வைத்திருந்தார். அந்த கடை அருகில் பைக்கை நிறுத்தியதால் அவருக்கும் எனக்கு ஏற்கனவே முன்பகை இருந்தது. அதனால் எனது மகனை கடைக்காரர் கார்த்திகைராஜு அசிங்கமான வார்த்தையால் பேசினார். அப்போது சேசு என்பவர் எனது கொளுந்தனாரை கிரிக்கெட் மட்டையால் தலையில் அடித்துவிட்டார்.

2. அதனால் நாங்கள் 108க்கு போன் செய்து அவரை இராமேஸ்வரம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அந்த மருத்துவமனையில் இருக்கும்போது போலீசார் வந்து எனது கொளுந்தனை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது கொளுந்தன் கையெழுத்து செய்தார்.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது மகனை யாரும் அடிக்கவில்லை என்றால் சரிதான். எனது கொளுந்தனார் குருசெல்வம் சம்பவ நேரத்தில் மது அருந்தியிருந்தார் என்றால் சரிதான். சண்டைக்கு பின் 3 நாட்கள் எனது கொளுந்தனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல நல்ல நிலையில் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக விபரங்கள் அனைத்து நானும், அவரது மனைவியும் போலீசாரிடம் சொன்னோம். சேசு மனைவிக்கும் எனது கொளுந்தனாருக்கு சிறு சிறு பிரச்சனை இருந்து வந்தது என்றால் அப்படி ஒன்றும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

2. ஏற்கனவே சேசு மனைவி எனது கொளுந்தனார் குருசெல்வம் மீது கதவை அடிக்கடி தட்டுகிறார் எட்டிப்பார்க்கிறார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் எச்சரித்து அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்றும் இரவு சேசு வீட்டின் கதவை குருசெல்வம் தட்டியதால் அக்கம்பக்கத்தினர் சத்தம்போடவும் மதுபோதையில் இருந்த எனது கொளுந்தனார் தப்பிப்பதற்காக வாகனத்தை வேகமாக எடுத்துச்செல்லும்போது அருகில் உள்ள சுவற்றில் மோதி மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவம் நடக்கும்போது நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டில் இருந்து பார்த்தால் தெரியும். என்னிடம் போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார் என்றால் அப்போது என்னிடம் விசாரிக்கவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பாக என்னிடம் விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை** இல்லை.

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.07.14 10:04:10 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.26/2023

**prosecution witness: LW-2 as PW-2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முகேஷ் கண்ணன் | தொழில்/ பதவி | : மீன் பிடித்தல் |
| த/பெ. | : பாஸ்கரன் | வயது | : 19 |
| ஊர் | : வேர்கோடு, இராமேஸ்வரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>14.07.2026</u>

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது இராமேஸ்வரம் வேர்க்கோடில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். 23.06.2022ம் தேதி நானும் எனது சித்தப்பா குருசெல்வம் ஆகியோர்களும் பைக்கில் டீசல் பிடிக்க சென்றுவிட்டு வந்தோம். அந்த பைக்கை ரோட்டின் முடிவில் நிப்பாட்டினோம். அந்த இடத்தில் கார்த்திகைராஜு என்பவர் பெட்டிக்கடை வைத்திருந்தார். அதற்கு எதிரில் சேசு என்பவரின் வீடு இருந்தது. கார்த்திகைராஜு வீட்டிற்கு எதிரில் பைக்கை நிப்பாட்டிவிட்டு சென்றபோது அவர்கள் கெட்ட வார்த்தையால் என்னை திட்டி அடிக்க வந்தார். அப்போது எனது சித்தப்பா டீசல் கேனை வீட்டில் வைத்துவிட்டு வந்தார்.

2. அப்போது கார்த்திகைராஜு என்பவர் என்னை 4, 5 அடி அடித்துவிட்டார். அப்போது குருசெல்வம் என் அருகில் வந்து நின்றவுடன் சேசு என்பவர் கிரிக்கெட் பேட்டால் அவரின் பின்னந்தலையில் அடித்துவிட்டார். அவருக்கு மூக்கு, வாயில் இருந்து இரத்தம் வந்ததாகல் அவரை 108 ஆம்புலன்சில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனது அம்மாவும் குருசெல்வம் மனைவி ஆகியோர்கள் மருத்துவமனைக்கு சென்றார்கள். அங்கு வைத்து புகார் வாக்குமூலம் போலீசார் பெற்றார்கள்.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது சித்தப்பா குருசெல்வம் சம்பவத்தன்று மது அருந்தியிருந்தார் என்றால் சரிதான். அந்த சம்பவ இடத்தில் அருகில் காம்பவுண்ட் சுவர் ஒன்று உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாக சேசு மனைவிக்கும் எனது சித்தப்பாவிற்கு சிறு சிறு வாய்பிரச்சனைகள் இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது சித்தப்பா சேசு வீட்டிற்கருகில் பைக்கை நிறுத்தியிருந்தார் என்றால் சரிதான். கடற்கரைக்கு போவதற்கு நிறைய வழிகள் உண்டு என்றால் சரிதான். ஆனால் எளிதான பாதை அதுதான்.

2. நான் எனது சித்தப்பாவுடன் மருத்துவமனைக்கு சென்றேன். சித்தப்பா சம்பவம் நடந்த நேரத்தில் இருந்து 3 நாட்கள் சுயநினைவு இல்லாமல்தான் இருந்தார் என்றால் சரிதான். அப்போது போலீசார் அவரை விசாரிக்க முடியாமல் எழுதாத இரண்டு வெள்ளைபேப்பரில் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கை பற்றிய விபரங்களை சித்தப்பா மனைவியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று இரவு சேசு வீட்டின் கதவை தட்டும் சத்தம் கேட்டும் அக்கம்பக்கத்தினர் சத்தம்போடவும் மதுபோதையில் இருந்த எனது சித்தப்பா வாகனத்தை வேகமாக ஓட்டிக்கொண்டு செல்லும்போது அருகில் உள்ள சுவற்றில் மோதி மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. புகார்தாரர் எனது சித்தப்பா என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்றக்கேள்வி:**

புகார் யாரிடம் பெறப்பட்டது என்றால் எனது சித்தியிடம்தான் பெறப்பட்டது. எனது சித்தப்பா 3 நாட்கள் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அதனால் 3 நாட்கள் போலீசார் புகார் வாங்கவில்லை. அ.சா.1 குருசெல்வம் என்பவர் காவல் ஆய்வாளர் தன்னிடம் புகார் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் அவர் 3 நாட்கள் சுயநினைவு இல்லாமல்தான் இருந்தார்.

**மறுவிசாரணை** இல்லை.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.07.14 10:04:16 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.26/2023

**prosecution witness: LW–1 as PW–1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குருசெல்வம் | தொழில்/ பதவி | : மீன் பிடித்தல் |
| த/பெ. | : தொட்டிராஜன் | வயது | : 40 |
| ஊர் | : வேர்கோடு, இராமேஸ்வரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>**14.07.2026**</u>

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:–**</u>

1. நான் தற்போது இராமேஸ்வரம் வேர்க்கோடில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 23.06.2022 ம் தேதி வேர்க்கோடு தாண்டி உள்ள அருள் பெட்ரோல் பல்க்கில் இருந்து டீசலை கடலுக்கு போவதற்காக பிடித்துக்கொண்டு வந்தேன். ஏற்கனவே கார்த்திகைராஜுக்கும் எனது மதினி வீட்டுக்காரர் பாஸ்கரனுக்கும் அடிக்கடி சண்டை இருந்து வந்தது. நான் பிடித்து வந்த டீசலை எனது வீட்டில் வைத்துவிட்டு பைக்கை சேசுராஜா வீட்டில் வைத்துவிட்டு நானும் பாஸ்கரன் மகன் முகேஷ் கண்ணன் என்பவரும் வந்தபோது கார்த்திகைராஜும் எனது மதனி வீட்டுக்காரர் பாஸ்கரனும் சண்டை போட்டுக்கொண்டிருந்தனர். முகேஷ்கண்ணனும் கார்த்திகைராஜும் கையால் அடித்து கொண்டு சண்டை போட்டார்கள். எனது வண்டியில் இருந்த சாப்பாட்டை எடுக்க சென்றபோது என்னை சேசு ஆஜர் 3ம் எதிரி என்னை கிரிக்கெட் பேட்டை வைத்து பின்னந்தலையில் அடித்தார். அதன் பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இராமநாதபுரம் மருத்துவமனையில் வைத்து போலீஸ் ஆய்வாளர் ஒருவர் என்னை விசாரித்தார். நான் நடந்த விபரத்தை அவரிடம் கூறினேன். அதற்காக கம்ளெயிண்ட் வாங்கினார். அதில் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு ஏற்பட்ட காயம் காம்பவுண்ட் சுவரில் மோதித்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அங்கு சுவர் இல்லை. காலையில் வந்து போலீசார் என்னிடம் எங்கள் வீட்டிற்கு வந்து சாட்சியம் அளிக்க சொல்லிக்கொடுத்தார் என்றால் இன்று சாட்சியம் அளிக்க வாருங்கள் என்ற சொல்லிவிட்டு சென்றார். எங்களுக்கும் எதிரி சேசு என்பவருக்கு பைக் நிறுத்துவதில் சிறு சிறு பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. 2 முதல் 4 சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. நான் பைக்கை வேகமாக ஓட்டுவது வழக்கம் என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். கடற்கரைக்கு செல்ல வேண்டும் என்றால் வேறு வழிகள் இல்லை. எனது வீடு கடற்கரை ஓரத்தில் உள்ளது. சேசு வீட்டிற்கு முன்பாக பைக்கை நிறுத்துவது வழக்கம் என்றால் சரிதான். அதனோடு ரோடு முடிந்துவிட்டது அதனால் அங்கு நிறுத்தியுள்ளேன். என்னால் பைக்கை எனது வீட்டுவரை உள்ள மணலில் உருட்டி செல்ல இயலும் என்றால் சரிதான். நீங்கள் வேண்டுமென்றே சேசு வீட்டிற்கு முன்பாக நிறுத்திவிட்டு அவர்கள் வீட்டுக்கதவை தட்டுவதும் எட்டிப்பார்ப்பது போன்ற செயல்களில் அடிக்கடி ஈடுபட்டிருந்ததால் சேசு மனைவி உங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதனால் என்னை போலீசார் விசாரித்து எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் இல்லை. சம்பவத்தன்றும் இரவு சுமார் 10.00 மணியளவில் கதவை தட்டும் சத்தம் கேட்டு சேசு மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்களான மற்ற எதிரிகள் சத்தம்போடவும் வண்டியை வேகமாக எடுத்துக்கொண்டு மதுபோதையில் இருந்ததால் அருவில் உள்ள சுவற்றில் மோதி மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. சம்பவம் நடந்து 6 மாதங்களாக நான் சுயநினைவு இல்லாமல்தான் இருந்து வந்தேன். நான் சுயநினைவு இல்லாத நிலையில் இருந்தபோது போலீசார் ஒரு எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். யாரை அடித்தார்கள் என்று கேட்டு கையெழுத்து வாங்கினார்கள். நான் டாக்டரிடம் செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்று தெரியாது என்னை அடிக்கும்போது சுமார் 8.00–8.30 மணி இருக்கும். மறுநாள் இராமநாதபுரம் அரசு மருத்துவனையில் இருந்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் ஆபிசில் வைத்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.

கார்த்திகைராஜும் எதிரிகளும் சண்டை போட்ட விபரம் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் 2 பேரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் வீட்டிற்கு சென்று டீசல் கேனை வீட்டிற்கு சென்று வைத்துவிட்டு வந்தேன் என்றால் சரிதான். அப்போது எனது மகனை நில்லுடா என்று சொன்னேன்.

4. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரி சேசுவின் மனைவி என் மீது புகார் கொடுத்ததாகவும் அன்றைய தினம் நான் வீட்டை எட்டிப்பார்த்ததால் அக்கம்பக்கத்தினர்கள் சத்தம் போட்டவுடன் மதுபோதையில் இருந்த நான் எனது பைக்கை வேகமாக எடுத்துக்கொண்டு தப்பித்து செல்லும்போது அருகில் இருந்த சுவற்றில் மோதி மேற்படி காயம் ஏற்பட்டது என்றாலும் ஏற்கனவே இருந்த மனக்கசப்பால் நடக்காத சம்பவத்திற்கு எதிரி மீது பொய்ப்புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக என்னிடம் போலீசார் தனியாக விசாரித்து வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.14 10:04:24 +0530